## சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்

## O.S. No. 28/2022

2025–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 02–ஆம் நாள் வா.சா.1 சாட்சி திருமதி.ரூபா ராமச்சந்திர கடடி என் முன் சாட்சியாக விசாரிக்கப்படுபவர். 1969ம் ஆண்டு 24வது சட்டப்பிரிவு 4(1) ஏற்பாட்டின்படி உயர்திரு.கே.எஸ்.ஷபீனா, பி.ஏ., பி.எல்., சார்பு நீதிபதி, சத்தியமங்கலம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திருமதி.ரூபா ராமச்சந்திர கடடி | தொழில் | : கிளை மேலாளர் |
| த/பெ | : ராமசந்திர கடடி | கிராமம் | : புஞ்சை புளியம்பட்டி |
| வயது | : | தாலுக்கா | : சத்தியமங்கலம் |

வா.சா.1: முதல் விசாரணை:

நான் இவ்வழக்கில் வாதி வங்கி கிளையின் மேலாளர் ஆவேன். என் தரப்பில் சாட்சியமாக விசாரணை செய்ய பிரமாண வாக்குமூல பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பிரமாணப் பத்திரிக்கையில் கண்டுள்ள சங்கதிகளை அறிவேன். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்ககோருகிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான்.

ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

28.04.2017ம் தேதியிட்ட வாதி வங்கிக்கு, பிரதிவாதி எழுதிக்கொடுத்த கடன் விண்ணப்பம் அசல் வா.சா.ஆ.1 ஆகவும், 10.05.2017ம் தேதியிட்ட பிரதிவாதிக்கு கடன் அனுமதி வழங்கிய குறிப்பாணை அசல் வா.சா.ஆ.2 ஆகவும், 10.05.2017ம் தேதியிட்ட

வாதி வங்கிக்கு, பிரதிவாதி எழுதிக்கொடுத்த கூட்டுக்கடன் ஒப்பந்தப்பத்திரம் அசல் வா.சா.ஆ.3 ஆகவும், 10.05.2017ம் தேதியிட்ட வாதி வங்கிக்கு, பிரதிவாதி எழுதிக்கொடுத்த செயல்படுத்தப்பட்ட மறு/கடன் முன்பணம் கடிதம் அசல் வா.சா.ஆ.4 ஆகவும், 01.04.2020ம் தேதியிட்ட பிரதிவாதி கடனுக்காக எழுதிக்கொடுத்த ஒப்புகை உயிர்ப்பு கடிதம் அசல் வா.சா.ஆ.5 ஆகவும், 17.07.2018ம் தேதியிட்ட வாதி வங்கியினர் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.6 ஆகவும், 14.09.2016ம் தேதியிட்ட வாதி வங்கியினருக்கு மாவட்ட தொழில் மையத்தின் பொது மேலாளரால் வழங்கப்பட்ட கடிதம் உண்மை நகல் வா.சா.ஆ.7 ஆகவும், 06.09.2016ம் தேதியிட்ட பிரதிவாதி வேலையற்ற இளைஞர் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் நிதி உதவிக்காக சமர்ப்பித்த விண்ணப்பம் அசல் வா.சா.ஆ.8 ஆகவும், 26.08.2016ம் தேதியிட்ட பிரதிவாதிக்கு மேகலா மெஷின்ஸ் இந்தியா நிறுவனம் வழங்கிய விலைப்பட்டியல் விவரக்குறிப்பு அசல் வா.சா.ஆ.9 ஆகவும், 13.05.2017ம் தேதியிட்ட பிரதிவாதிக்கு மேகலா மெஷின்ஸ் இந்தியா நிறுவனம் வழங்கிய ரசீது அசல் வா.சா.ஆ.10 ஆகவும், 30.03.2017ம் தேதியிட்ட கட்டிட வாடகை ஒப்பந்தப்பத்திரம் பிரதிவாதி வெள்ளிங்கிரி மற்றும் நடராஜன் இருவரும் செய்து கொண்டது அசல் வா.சா.ஆ.11 ஆகவும், 24.01.2022ம் தேதியிட்ட பிரதிவாதி கடனுக்குண்டான கணக்கு பட்டியல் சான்று நகல் வா.சா.ஆ.12 ஆகவும், 04.07.2025ம் தேதியிட்ட பிரதிவாதியின் கடன் கணக்கு பட்டியல் (10.05.2017 முதல் 24.06.2025 வரை) சான்று நகல் வா.சா.ஆ.13 ஆகவும் ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணங்களின் பரிசீலனையில் தாவாப்படி பரிகாரம் வழங்க கோருகிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.